ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

21.09.2016 - மலர் 13, இதழ் 30




## உடலை, அறிவை பலப்படுத்தும் உடற்பயிற்சி

விலை ரூபா 15/-

**பொலன்னறுவை யுகம்**
(வரலாற்று பாடத் தொடர்)

**இளம் எழுத்தாளர் போட்டி**

**புதிய தொடர்கதை ஆரம்பம்...**

**மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னை தெரியுமா?




அ)


1. எனது உணவு புல்.
2. நான் பால் தருவேன்.
3. எனது இளமைப் பெயர் கன்று.



4. நான் யார்? ..............................

ஆ)

1. எனக்கு இரண்டு கால்கள் உண்டு.
2. நான் அதிகாலையில் கூவுவேன்.
3. எனது பெண் இனம் கோழி.



4. நான் யார்? ..............................

இ)

1. நான் நன்றியுள்ள மிருகம்.
2. என்னை செல்லப்பிராணியா கவும் வளர்ப்பதுண்டு.



3. நான் குரைப்பேன்.
4. நான் யார்? ..............................

ஈ)

1. எனக்கு நான்கு கால்கள் உண்டு.
2. நான் வேகமாக ஓடுவேன்.
3. என்னில் சவாரி செய்வதுமுண்டு.



4. நான் யார்? ..............................

## பொருத்தமான செயற்பாடுகளை எழுதுக

| | | |
|---|---|---|
| பனிச் சறுக்கல் | சிரித்தல் | ஆடை அணிதல் |
| கனவு காணல் | தொலைபேசி உரையாடல் | வாசனை முகர்தல் |
| பொருள் வாங்கல் | மீன் பிடித்தல் | |



..................



..................



..................



..................



..................



..................



..................



..................

## பழங்களும் மரக்கறிகளும்



1. எமது அன்றாட உணவில் பழங்களும் மரக்கறிகளும் சேர்த்துக்கொள்வதால் கிடைக்கும் நன்மைகள் 2 தருக.
   ..............................................
   ..............................................
2. நீங்கள் விரும்பி உண்ணும் மரக்கறி வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
   ..............................................
3. கொடியாக வளரும் பழ வகைகள் எவை?
   ..............................................

எனது பெயர் சேகர். எனக்கு நான்கு பிள்ளைகள் உள்ளன. புகைப்படம் எடுப்பது எனது பொழுதுபோக்கு. எப்போது சுற்றுலா சென்றாலும் எனது கழுத்தில் கெமராவை மாட்டிக்கொள்வேன். அன்றொரு நாள் எனது அப்பா, மனைவி மற்றும் பிள்ளைகளுடன் பொழுதைக் கழிப்பதற்காக பூங்காவுக்குச் சென்றேன்.



1. படத்தில் சேகரை இனங்காண்பதற்கான அடையாளங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.
   ..............................................
2. சேகர் தம்பதியினருக்கு எத்தனை பிள்ளைகள்?
   ..............................................
3. இங்கு காணப்படும் விளையாட்டுப் பொருளொன்றைக் குறிப்பிடுக.
   ..............................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# சமூகத்தினைப் பாதிக்கும் மது அருந்தும் பழக்கம்





இன்று சமூகத்தில் மது பாவனை பரவலாக உள்ளது. வைபவங்கள் மற்றும் திருமணக் கொண்டாட்டங்களில் ஓர் அம்சமாக இருந்த மது பாவனை, இன்று நாளாந்த விடயமாக உருவாகி வருகின்றது. இந்த பழக்கம் தற்போது பாடசாலை பிள்ளைகள் மத்தியிலும் பரவி வருகின்றமை மிகவும் கவலைக்குரிய விடயமாக அமைந்துள்ளது.

மேலும் மதுவைவிட, தற்போது போதை மருந்துகளின் பாவனையும் அதிகரித்துள்ளது. இதனால் நாட்டின் எதிர்கால சந்ததியினர் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளனர்.

ஒவ்வொரு மனிதரினது வாழ்க்கையிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பருவமாக மாணவப் பருவம் உள்ளது. எனவே, இந்த பருவத்தில் நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு காரியமும் பயன்மிக்கதாக அமைதல் வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் நீங்கள் செய்யப்போவது என்ன?, இப்பொழுது நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? என்பன குறித்து நீங்கள் சிந்திக்க வேண்டும். இந்த பருவத்தில் திருப்திகரமான நல்ல செயல்களில் ஈடுபட்டால்தான் வாழ்க்கையும் திருப்திகரமானதாக இருக்கும். இவ்வாறு திருப்திகரமான வாழ்க்கையை வாழ்பவர்களுக்கு தீய செயல்களில் ஈடுபட ஆர்வம் ஏற்பட மாட்டாது. மதுவுக்கு அடிமையானவர்களின் வாழ்க்கை சீர்கெட்டுப் போவதை கண்முன்னே காண்கின்றோம். மதுவுக்கு அடிமையானவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கின்றது என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

## ஏற்படும் தீமைகள்

மதுபானம் உடல் ஆரோக்கியத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. சிந்தனையையும் குழப்பும். மதுவுக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்டெடுப்பது மிகவும் சிரமமாகும். மது அருந்துபவர்கள் தவறான செயல்களில் மட்டுமன்றி சமூக விரோத செயல்களிலும் ஈடுபடுகின்றனர். பேசக்கூடாத விடயங்களை பேசுவார்கள். இதனால், மற்றவர்களுக்கு பெரும் இடைஞ்சல் ஏற்படுகின்றது. இத்தகைய செயல்களால், பிறர் இவர்களை வெறுக்கத் தொடங்குகின்றனர். இவ்வாறே, போதை மருந்துப் பாவனையும் எண்ணற்ற தீமைகளை ஏற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆகவே, போதை எனும் கனவுலகில் மிதக்காமல் நிஜ உலகில் வாழப் பழகிக்கொள்வதே நன்மை பயக்கும்.

---

## மேல் மாகாண கலை, கலாசார அமைச்சு நடாத்தும்

# இளம் எழுத்தாளர் போட்டி - 2016

ஊடக அனுசரணை: விஜய்

மேல் மாகாண இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இலக்கியப் போட்டியொன்றை நடாத்த மேல் மாகாண கலை, கலாசார அமைச்சு திட்டமிட்டுள்ளது. கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிரந்தர வதிவாளர்கள் இதில் கலந்துகொள்ள முடியும். இளம் எழுத்தாளர் என்ற ரீதியில் தமது பெயரில் இதுவரை எந்தவோர் ஆக்கத்தையும் பிரசுரிக்காதவராக இருத்தல் வேண்டும்.

1. இளம் எழுத்தாளருக்கான நாவல் போட்டி (20,000 முதல் 25,000 சொற்கள் வரை)
2. இளம் எழுத்தாளருக்கான சிறுகதைப் போட்டி (750 முதல் 1,000 சொற்கள் வரை)
3. இளம் எழுத்தாளருக்கான மரபுக் கவிதைப் போட்டி (40 முதல் 60 வரையிலான வரிகள்)
4. இளம் எழுத்தாளருக்கான புதுக்கவிதைப் போட்டி (40-60 வரிகள்)
5. இளம் பாடலாசிரியருக்கான போட்டி (பாடுவதற்கு தகுந்த சொற்களின் எண்ணிக்கை)

### விபரங்களும் நிபந்தனைகளும்

01. போட்டியாளர் ஒருவர் ஒரு போட்டிக்காக ஒரேயொரு ஆக்கத்தையே சமர்ப்பிக்கலாம். எனினும், அவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் கலந்துகொள்ள முடியும்.
02. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் விண்ணப்பதாரி 16-25 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
03. சகல ஆக்கங்களும் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். வேறோர் ஆக்கத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகவோ, ஒத்ததாகவோ, தழுவலாகவோ இருக்கக்கூடாது. அத்துடன், இதற்கு முன்னர் வெளிவராத ஆக்கமாகவும் இருத்தல் வேண்டும்.
04. சகல விண்ணப்பப் படிவங்களுடனும் கிராம உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொண்ட வதிவிட சான்றிதழ்/ உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்.
05. சகல ஆக்கங்களும் A4 தாளில் ஒருபக்கம் மாத்திரம் தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டதாகவோ அல்லது கணினி தட்டச்சு செய்யப்பட்டதாகவோ இருத்தல் வேண்டும். தேவைக்கேற்ப தாள்களை இணைத்துக்கொள்ளலாம்.
06. சகல ஆக்கங்களுடனும் விண்ணப்பப் படிவம் இணைக்கப்படல் வேண்டும். போட்டியாளரை இனங்காணும் விதத்தில் எவ்வித அடையாளங்களும் ஆக்கங்களிலோ, பிரதிகளிலோ இருக்கக்கூடாது. (மாதிரி விண்ணப்பப் படிவம் அருகே வழங்கப்பட்டுள்ளது)
07. ஒவ்வோர் ஆக்கமும் வெவ்வேறாக அனுப்பப்படல் வேண்டும்.
08. ஆக்கங்களை அனுப்பும்போது, மூலப் பிரதியை அனுப்புவதை தவிர்க்கவும். ஏனெனில், தெரிவுசெய்யப்படாத ஆக்கங்களின் பிரதிகள் மீள் அனுப்பப்பட மாட்டா.
09. ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016 ஒக்டோபர் 31. குறித்த தினத்திலோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கும் வகையில் கீழ் காணும் முகவரிக்கு ஆக்கங்களை பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.



முகவரி: மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி 2016
கலை, கலாசார அமைச்சு,
4ஆம் மாடி, ரன்மகபாய, பத்தரமுல்லை.

10. மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி சம்பந்தமாக நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானமாகும்.

### மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி - 2016

01. போட்டியின் பெயர்: ..........
02. மொழி மூலம்: ..........
03. போட்டியாளரின் முழுப் பெயர்: ..........
04. புனைபெயர்: ..........
05. நிரந்தர முகவரி: ..........
06. மாவட்டம்: ..........
பிரதேச செயலகப் பிரிவு: ..........
07. பிறந்த திகதி: ..........
அடையாள அட்டை இலக்கம்: ..........
08. 2016.10.31இல் வயது: ..........
வருடம்: .......... மாதம்: .......... தினங்கள்: ..........
09. பால்: ..........
10. பாடசாலை அல்லது தொழில்புரியும் இடம்: ..........
11. தொலைபேசி இலக்கம்: ..........
மின்னஞ்சல் முகவரி: ..........
12. இதற்கு முன் உங்கள் பெயரில் ஆக்கமேதும் வெளியாகி உள்ளதா? ..........
13. ஆக்கத்தின் பெயர்: ..........
14. ஆக்கத்தில் அடங்கியுள்ள வசனங்கள் அல்லது வரிலசகளின் எண்ணிக்கை: ..........
15. மூன்று பிரதிகளில் முன்வைத்தீர்களா? ..........
16. உங்களின் சுய ஆக்கமா? ..........
17. உங்களை இனங்காணும் ஏதேனுமோர் அடையாளம் உங்கள் ஆக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? ..........
18. மேல் மாகாணத்தில் நிரந்தரவதிவாளரான கால எல்லை: ..........
19. கிராம உத்தியோகத்தரின் வதிவிட உறுதிச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? ..........

மேற்குறித்த விபரங்கள் அனைத்தும் உண்மை எனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகிறேன். இப்போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானம் என ஏற்றுக்கொள்கிறேன்.

திகதி: 2016 ..........          போட்டியாளரின் கையொப்பம் ..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீக்ரட் சிக்ஸ்
# இரகசிய குழு...

தொடர்கதை...




ஊரிலுள்ள அனைவரும் "ஆ...!" என்று வானத்தையே பார்த்தபடி இருந்தனர். கடந்த சில நாட்களாகவே ஊர் மக்களுக்கு இதுதான் வேலை. எல்லாவற்றுக்கும் காரணம் அந்த மர்மமான 'ஒளி'. பகல் நேரங்களில் அது தெரிவதில்லை. இருட்டியதும் திடீரென்று வானில் சரியாக இந்த ஊருக்கு மேலாக அந்த ஒளி தென்படும். இந்த ஊரின் பெயர் 'மங்களபுரம்'.

"அட எங்கப்பா தெரியலயே... காணாம போயிருச்சோ...!?"

"இல்லலைப் பாட்டி, அங்க பார்!... அதோ, தெரியுது பார்!"

பல் கொட்டிப்போன பாட்டியிலிருந்து, பல் முளைக்காத சிறுசுகள் வரை இதுதான் பொழுதுபோக்கு.

ஹரிஷ்ஷும் அதைப் பார்த்துக்கொண்டிருந்தான். இன்னும் கொஞ்ச நேரத்தில் அவன் இரகசியக் கூட்டத்துக்கு செல்ல வேண்டும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவும் கூட்டம் நடக்கும். மொத்தம் ஆறு பேர் இந்த இரகசியக் குழுவில் இருக்கிறார்கள். இன்றைய சந்திப்புக்களுக்குரிய கடவுச் சொல்லை Password) ஹரிஷ் மனதினுள் சொல்லிக்கொண்டான்.

ஹரிஷின் நாயான 'மொன்டி' (monty) குரைத்தது. அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் சரியாக இருந்தது.

"வா மொன்டி! நாம் போவோம்..."

வாலை ஆட்டியபடி ஹரிஷுடன் சென்றது மொன்டி.

மொன்டி- தான் இந்த இரகசியக் குழுவின் ஆறாவது உறுப்பினர். ஹரிஷ் தன் தெருவைக் கடந்து, அடுத்த தெருவுக்குள் நுழைந்தான். பின்னர் அதன் வழியாக மெல்ல நடந்தான். மொன்டி வேகமாக முன்னே ஓடுவதும் பின்னர் திரும்பி ஹரிஷிடம் வருவதுமாக இருந்தது. பல வீடுகளைக் கடந்து, ஒரு வெட்டவெளியான பகுதிக்கு வந்து சேர்ந்தான் ஹரிஷ். இடது பக்கம் அருணாச்சலம் முதலாளியின் தோட்டம். அதற்குள், கைவிடப்பட்ட ஒரு பழைய 'ஷெட்' இருந்தது. இங்குதான் கூட்டம் நடைபெறவுள்ளது.

சுற்றும் முற்று பார்த்துவிட்டு, முள் வேலியின் ஓரமாக இருந்த இரகசியப் பாதை வழியே நடந்தான் ஹரிஷ். மொன்டியும் ஆர்வத்துடன் அவன் பின் தொடர்ந்தது.

"ஏய்... யாரோ வாறாங்க...!"

"எல்லாம் ரெடி தானே...!?"

அருணும், அனிதாவும் பேசிக்கொண்டார்கள். அருண்தான் குழுவின் தலைவன். அனிதா அவனது தங்கை.

'டிங்...!"

மணியொலி கேட்டது.

"மொன்டியின் வேலையாகத்தான் இருக்கும். ஹரிஷிடம் எத்தனை முறை சொல்லிவிட்டேன். நூலில் படாமல் பார்த்துக் கொள்ளச் சொல்லி..."

கொஞ்சம் கோபமாகச் சொன்னான் அருண்.

"மொன்டிக்கு எப்படித் தெரியும்...!? அது ஒரு நாய். நூலில் பட்டு மணி அடிக்கக்கூடாது என்றால் மொன்டியை தூக்கிக் கொண்டுதான் வரணும். பாவம் ஹரிஷ்"

"வருவது வெளி ஆளா? நம் ஆளா?" என்று கண்டுபிடிக்கத்தான் இந்த ஏற்பாடு. ஒவ்வொரு முறையும் ஹரிஷ் வரும்போது மணி அடித்தால், வெளி ஆள் வருவதாகவே நாம் நினைப்போம்...!?

அனிதா, பதில் சொல்வதற்கு முன் "வவ்!" என்றொரு ஓசை கேட்டது. அனிதா சிரித்தபடி கதவருகே சென்றாள். (தொடரும்)

மர்ம ஒளி பரப்பியது செவ்வாய்க்கிரக மனிதர்களா...? உண்மையை கண்டறிய களம் இறங்கிய குழு...

## கர்வம் என்றும் ஆபத்தே

ஒரு காட்டில் பலம் கொண்ட சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. ஒருநாள் அந்த சிங்கம் தன் வேட்டையை முடித்துவிட்டு மரத்தடியில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தது. அந்த நேரம் சிங்கத்தின் முன் ஒரு குளவி வட்டமிட்டுக்கொண்டிருந்தது. அதனைக் கண்ட சிங்கம், "ஏய் குளவியே! காட்டு ராஜாவான நான் உறங்குவது உன் கண்களுக்கு தெரியவில்லையா? இந்த இடத்தை விட்டு போ... இல்லையெனில் நான் என்ன செய்வேன் என்று உனக்குத் தெரியும்தானே?" என எச்சரித்தது.

ஆனால், குளவி சிங்கத்தைப் பார்த்து "உன்னைக் கண்டு நான் ஏன் பயப்பட வேண்டும். உன்னுடைய கோரப் பற்களும் பயங்கரமான நகங்களும் என்னுடைய கொடுக்குக்கு ஈடாகாதே. இதோ பார் இப்போதே என் வித்தையைக் காட்டுகின்றேன்" எனக் கூறிக்கொண்டே சிங்கத்தின் முகத்தில் பாய்ந்து கண், காது, மூக்கு ஆகிய பகுதிகளில் மாறிமாறிக் கொட்டிக் கொண்டே இருந்தது. சிங்கத்தால் குளவியின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. பதில் தாக்குதல் செய்யவும் முடியவில்லை. வலி மிகுதியால் கீழே சாய்ந்தது சிங்கம். குளவி தன் பலத்தை எண்ணிக் கர்வம் கொண்டது.



"பார்த்தாயா என் பலத்தை" என்று கூறி சிங்கத்தைப் பார்த்தவாறு பறந்தது. குளவி கர்வம் கொண்டு இருந்தமையால் மரக்கிளையில் இருந்த சிலந்தியின் வலை குளவியின் கண்களுக்கு தெரியவில்லை. அதனால் சிலந்தியின் வலையில் குளவி சிக்கியது. குளவி எவ்வளவோ முயற்சித்தும் வலையில் இருந்து தப்ப முடியவில்லை. அந்நேரம் வலையில் இருந்த சிலந்தி கர்வம் கொண்ட குளவியை இரையாக உண்டு இளைப்பாறியது.

**சைக்கிள் வெற்றியாளர்**

துர்க்கா பெலஸ் பத்திரிகை நிலையம் நடாத்திய போட்டியில் 'சைக்கிள்' ஐ வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலி...
கோ.வுவணராஜ்,
(வெற்றி இல - V30)
திகோ/அன்னை சாரதா கலவன் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரியோ ஒலிம்பிக் நிகழ்வின்போது, உலகப் புகழ்பெற்ற ஜப்பான் நிசான் மோட்டோர் வாகன நிறுவனமானது, அவர்களின் புத்தம் புதிய லீஃப் மின்சாரக் காரை அறிமுகப்படுத்தியது. ஒலிம்பிக் நிகழ்வுக்கு வருகை தந்த உயர் விருந்தினரையும், பிரமுகர்களையும் அழைத்துச் செல்வதற்கு இந்த புத்தம் புதிய லீஃப் மோட்டார் வாகனங்களையே பயன்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் நிகழ்வின்போது அறிமுகமான நவீன நிசான் லீஃப் கார்

## இதன் சிறப்பு

சூழலுக்கு மிகவும் உகந்த இந்த 'லீஃப்' மோட்டோர் வாகனத்திற்கு ஒரு துளி எரிபொருள்கூட பயன்படுத்துவதில்லை. எனினும், இதனை எதிர்காலத்தில் பந்தய கார் ஒன்றினைப் போல் தயாரிக்கவுள்ளதாகவும், பெரும்பாலானோர் இலகுவாகப் பழகும் விதத்தில் தயாரிக்கவுள்ளதாகவும் நிசான் மோட்டார் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த காரில் சாரதியுடன் மேலும் இருவர் மாத்திரமே பயணிக்க முடியும்.இதனை பந்தயக் கார்போல் தயாரித்திருப்பதே இதற்கு காரணமாகும் என நிசான் நிறுவனம் மேலும் தெரிவிக்கின்றது.

## சக்திவாய்ந்த பற்றரி

இந்த மோட்டார் காருக்கு 5 லித்தியம் மொடியூலுக்குரிய பற்றரி தொகுதியைப் பயன்படுத்தியுள்ளனர். ஐந்து விநாடியில் மணிக்கு 62 மைல் வேகத் திறன் இந்த நவீன மோட்டோர் காருக்கு இருப்பதாக கூறப்படுகின்றது.

## நிசான் லீஃப்

இன்று உலகில் எரிபொருள் சிக்கனம் நிறைந்த, சூழலை மாசுபடுத்தாத, முதல்தர குடும்ப வாகனமாக நிசான் லீஃப் மோட்டார் வாகனம் கருதப்படுகின்றது. இம் மோட்டார் வாகனத்தின் பற்றரியை முழுமையாக மின்னேற்றுவதற்கு வெறும் 15 நிமிடம் மாத்திரமே செலவாகும். இந்த பற்றரியை ஒருமுறை மின்னேற்றுவதற்கு 350 ரூபா செலவாவதோடு, டீசல் மற்றும் பெற்றோல் போன்ற எரிபொருட்ளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அது மிகவும் இலாபகரமானதாகும். ஒரு கிலோ மீற்றருக்கு இரண்டு ரூபாய் எனும் சொற்ப பணமே செலவாகும். பற்றரியை முழுமையாக மின்னேற்றினால் 160 கிலோ மீற்றர் தூரம் பயணிக்க முடியும் என இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.









## முதல் தரமான வாகனம்

பிரான்சின் 'ரெனோல்' நிறுவனமும் ஜப்பானின் நிசான் மோட்டார் வாகன நிறுவனமும் ஒன்றிணைந்து இந்த மோட்டோர் வாகனத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் அனைத்தும் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியது. உலகில் முதல்தர மோட்டோர் வாகனமாக 2011 ஆம் ஆண்டளவில் அனைவரினதும் தெரிவாக இருந்தது நிசான் லீஃப் ஆகும். இப்பொழுது அமெரிக்காவின் முதலாம் தர இலத்திரனியல் மோட்டோர் காராகவும் இந்த கார் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## வசதிகள் அதிகம்


குறைந்தளவு தொகையினரே, பயணிக்கக் கூடியதாக நிசான் லீஃப் கார் இருப்பதால் அதன் பின்பக்கம் பொருட்களை ஏற்றுவதற்கு தேவையான இடவசதி உள்ளது. அதுமட்டுமன்றி, இந்த காரில் பொருத்தப்பட்டுள்ள இயந்தரமானது, எவ்வித சத்தமும் இன்றி செயல்படக்கூடியதாகும்.

(அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலன்ன



அநுராதபுர யுகத்தின் இறுதி மன்னனான 4 ஆம் மகிந்தனின் ஆட்சியின்போது, முக்கிய விகாரைகளின் நிர்வாக ஒழுங்கு வசதிகளும் நீர்ப்பாசனங்களும் சிறந்து விளங்கியதோடு, மக்களும் சிறப்பாக வாழ்ந்தார்கள்

## அநுராதபுரத்தின் சரிவு

இலங்கையின் 4 ஆம் மகிந்தனுக்குப் பின்னர் அரசியல் நிலை சரிவை நோக்கிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. இவனது மகனாகிய 5 ஆம் சேனன் (972-982) தனது 12 ஆவது வயதில் அரசைப் பெற்றப் பின்னர் பத்தாண்டுகளில் இறந்தான். மன்னனுக்கும் சேனாதிபதி சேனனுக்கும் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, உதயன் என்ற அரசவை அதிகாரி சேனாதிபதியாக நியமிக்கப்பட்டான். பின்னர் சேனன் படையுடன் வந்து மன்னனை உருகுணைக்கு விரட்டிவிட்டு நிருவாகத்தைக் கவனித்தான். ஆனால், சேனைத் தலைவனின் நிபந்தனைகளுக்கு கீழ் மீண்டும் அரசாட்சியைக் கைப்பற்றினான் மன்னன். அப்போது நாட்டில் இராணுவத்தினர் கொள்ளையில் ஈடுபட்டனர். அத்தோடு, அரசன் கூடா நடத்தையாளருடன் நட்பு வைத்திருந்தமையும், குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தமையும் நிர்வாகச் சீர்கேடுகள் அதிகமாக காரணமாயின. இந்நிலையிலேயே, அநுராதபுர யுகத்தின் இறுதி மன்னன் 5 ஆம் மகிந்தன் கி.பி 982 இல் அரசனானான்.

5 ஆம் மகிந்தன், 5 ஆம் சேனனின் தம்பி என குறிப்பிடப்பட்ட பொழுதிலும் முறையான வரலாற்று சான்றுகள் இல்லை. அதேவேளை, அவனால் சிறந்த ஆட்சியை மக்களுக்கு கொடுக்க முடியவில்லை. ஏனெனில், சேனாதிபதியாகிய சேனனின் கூலிப் படையினர் மக்களை கொடுமைப்படுத்தியதோடு, அரசனும் ஆட்சி அனுபவமற்றவனாக இருந்தமையால் இச் சீர்கேடுகள் மேலும் அதிகரித்தன. நிலைமையைப் பயன்படுத்தி குடிகள் வரிகளை நிராகரித்தனர். அதனால், படையினருக்கு வேதனம் வழங்காததால் படையினர் கலகம் செய்தனர். அரண்மனையை முற்றுகையிட்டு பணத்தைப் பெற முயன்றனர். 5 ஆம் மகிந்தன் சுரங்கப்பாதையால் தப்பியோடி உருகுணைக்குச் சென்று அங்கு தனது ஆட்சியைத் தொடர்ந்து நடத்தினான். இருப்பினும், சிங்களப்படையினரும் அந்நியக் கூலிப்படையினரும் மக்களிடம் கொள்ளையிட்டனர். இவ்வாறான அவல நிலையில் நாடும் தலைநகரும் இருந்தபோதே சோழனின் பெரும் படையெடுப்பு நடைபெற்றது.

## சோழப் பேரரசின் எழுச்சி

சங்ககாலத்தில் தமிழ்நாட்டில் சுதந்திரத்துடன் திகழ்ந்த சோழ அரசு, களப்பிரர் ஆட்சியின் போது தன் சுதந்திரத்தை முற்றாக இழந்திருந்தது. இவ்வாறு சுமார் 6 நூற்றாண்டுகளுக்கு மேல் அரசியல் முக்கியத்துவம் இழந்திருந்த சோழர் 9 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வியக்கத்தக்க வகையில் ஒரு பேரரசை அமைத்துக் கொண்டனர். அத்தோடு, இந்தியாவின் தென்னகம் முழுவதையும் அடக்கியதோடு, சோழப் பேரரசு முதலாம் இராஜராஜன் (கி.பி.985-1014), முதலாம் இராஜேந்திரன் (கி.பி 1014-1044) போன்ற பெருமன்னர்கள் இந்தியாவுக்கு வெளியேயும் விரிவுபெற்றதால் இந்தியாவின் பேரரசுகளிலேயே தனிப்பெருமையுடையதாக விளங்கியது.

சோழர்கள் தஞ்சாவூரை தலைநகராக்கி சோழ அரசை நிறுவினார்கள். இம் மன்னர்கள் முழு தென்னகத்தை மட்டுமன்றி, அதற்கப்பால் உள்ள இராச்சியங்களிலும் தமது ஆட்சியை நிலைநாட்டினர். அத்தோடு, அயல்நாடுகள் மீது படையெழுச்சி மேற்கொண்டு தென்கிழக்கு ஆசியாவின் சில பகுதிகள், மாலைதீவு போன்ற நாடுகளைக் கைப்பற்றி ஈற்றில் இலங்கைமீது படையெடுப்பை மேற்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றினர்.


## இலங்கைப் படையெடுப்பு

5ஆம் மகிந்தனின் ஆட்சியின்போது, நாட்டின் பலவீனமான நிலையைப் பயன்படுத்தி சோழர்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# றுவை யுகம்

## க.பொ.த (சா/த) பாடத்திட்டத்திற்கு உட்பட்டது

பெரும் படையெடுப்பு ஒன்றை மேற்கொண்டனர். முதலாம் இராஜராஜன் காலத்திலும் பின்னர் முதலாம் இராஜேந்திரன் காலத்திலும் இரு படையெடுப்புகள் நடைபெற்றதன் விளைவால் இலங்கை சோழராட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

முதலாம் இராஜராஜன் 993 ஆண்டளவிலான படையெடுப்பின்போது, இராசரட்டை உள்ளிட்ட வட இலங்கை முழுவதையும் இலகுவாக கைப்பற்றிக்கொண்டனர். வட இலங்கை 'மும்முடிச் சோழமண்டலம்' என்ற பெயருடன் சோழப் பேரரசில் ஒரு புதிய மாகாணமாக சேர்க்கப்பட்டது. தலைநகரமானது அநுராதபுரத்தில் இருந்து பொலன்னறுவைக்கு மாற்றப்பட்டது. அதற்கு 'ஜனநாதமங்களம்' என பெயர் சூட்டப்பட்டது. ஏற்கனவே சில அநுராதபுர அரசர்களால் தமது இராணுவ நிலையமாகவும் தற்காலிக அரசபீடமாகவும் இருந்த பொலனறுவையை சோழர் தலைநகராக்கினர்.







1017 ஆண்டில் இலங்கையைக் கைப்பற்றிய சோழவீரர்கள் முதலில் பல அரசுடமைகளை கைப்பற்றினர். உருகுணைக்கு ஓடிய மகிந்தனையும், ஒப்பந்தம் செய்வதென கூறி ஏமாற்றிச் சிறைப்பிடித்தனர். அதன் பின்னர் இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட மகிந்தன் 1029 இல் இறந்தான்.



### இலங்கையில் சோழராட்சி

இலங்கையில் சோழர் ஆட்சி சுமார் 77 ஆண்டுகள் நிலவியது. இக்காலகட்டத்தில் நாட்டின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் நிலவின. இதன்போது சோழ பேரரசுடன் இணைக்கப்பட்டிருந்த இலங்கையின் நிருவாகப் பொறுப்பை இலங்கை வந்த சோழப் பிரதிநிதிகள் வகித்தார்கள்.

இலங்கையில் பொலன்னறுவைக் காலத்தில் எல்லாத்துறைகளிலுமே தென் இந்திய பண்புகள் அதிகமாகக் காணப்பட்டன. சோழ பேரரசு ஆட்சியின்போது, இலங்கையிலிருந்த நீர்ப்பாசனங்களை வேண்டுமென்றே சிதைத்திருப்பர் என்பது பொருந்தாக் கூற்றாகும்.மாறாக அவற்றை பேணுவதே அவர்களின் கடமையாகக் கருதினார்.

சோழராட்சி காலத்தில் மேலும் பல தமிழ்க் குடிகளும் படைவீரர்களும் இலங்கையின் வடபகுதியில் குடியேறினர். சோழர் காலத்தில் தமிழர் செல்வாக்கு வலுப்பெற்றது போலவே, சைவமும் மேன்மை பெற்றது. அதனால், இலங்கையில் பல இந்துக் கோயில்கள் நிறுவப்பட்டன. இலங்கையின் சோழர் ஆட்சியின்போது, பௌத்த மதம் மீது பகைமை பாராட்டாது அதனையும் அனுஷ்டித்தனர். அதற்கு சான்றாக திருகோணமலைக்கு அண்மையில் உள்ள 'வெல்கம் வெஹர' என்ற ஒரு விகாரை சோழர்களால் திருத்திக் கட்டப்பட்டு 'இராஜராஜப் பெரும் பள்ளி' என அழைக்கப்பட்டதாக அங்குள்ள ஒரு கல்வெட்டு கூறுகின்றது. சோழராட்சியின் போது, இலங்கையில் நிறுவப்பட்ட சைவக் கோயில்கள், தமிழ்நாட்டில் அதே காலத்தில் இருந்த கட்டட முறையைப் பின்பற்றியே கட்டப்பட்டன.

இங்கு கண்டெடுக்கப்பட்ட நடராஜர் சிலைகள், பார்வதி, நாயன்மார் ஆகியோரின் திருவுருவச்சிலைகளை கொழும்பு அரும்பொருட் காட்சியகத்தில் நாம் இன்றும் காணலாம்.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

பெயர்: ...............................................

**01) பின்வரும் பந்தியை வாசித்து கீழ் காணும் வினாக்களுக்கு விடை தருக.**

சூரியனின் கதிர்கள் மரக்கிளைகளை ஊடுருவி வந்தன. அது உடலுக்கு இதமாக இருந்தது. பறவைகள் கானம் இசைத்தவண்ணம் குதூகலித்தன. மெலிதாக இளம் தென்றல் அனைவரையும் வருடிச் சென்றது. வீதியோரங்களில் இருந்த காட்டுமரப் பூக்களின் இதழ்கள் தரை முழுவதும் பரவி பட்டுக் கம்பளம் விரித்தாற்போல் காட்சியளித்தது. சூரியனைக் கண்ட களிப்பில் மரங்களும் பறவைகளின் கானத்திற்கு அமைய அங்கும் இங்குமாக அசைந்தாடின. இவற்றை ரசித்தவாறு நான் கிணற்றடியில் அமர்ந்திருந்தேன்.

1. இந்த நிகழ்வு எவ்வேளையைக் குறிப்பிடுகிறது?
   ..............................................................
2. கானம் என்பதன் ஒத்த சொல் தருக.
   ..............................................................
3. 'இதமாக' என்பதன் பொருள் யாது?
   ..............................................................
4. பந்தியிலுள்ள இணைமொழி ஒன்று தருக.
   ..............................................................
5. பூக்களின் இதழ்கள் எதற்கு உவமையாக கூறப்பட்டுள்ளது?
   ..............................................................
6. இளம் தென்றல் என்பதன் கருத்து யாது?
   ..............................................................

**02) பின்வரும் இணை மொழிகளை பூர்த்தி செய்க.**

1. அக்கம் - ..............................................
2. அருமை - ..............................................
3. அல்லும் - ..............................................
4. ஊண் - ..............................................
5. ஓட்டை - ..............................................

**03) வேறுபட்ட சொல்லின் கீழ் கீறிடுக.**

1. புத்தகம், பென்சில், கதிரை, அழிறப்பர்
2. கண், காது, கை, நாக்கு
3. யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, நல்லூர்

**04) பின்வரும் வாக்கியத்தின் உறுப்புகளைத் தருக.**

**அழகிய சிறுமி இனிய பாடலை ரசித்துப் பாடினாள்.**

அ) எழுவாய் ..............................................
ஆ) பயனிலை ..............................................
இ) செயற்படுபொருள் ..............................................
ஈ) எழுவாய் அடைமொழி ..............................................
உ) பயனிலை அடைமொழி ..............................................
ஊ) செயற்படுபொருள் அடைமொழி ..............................................




**05) பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துச் சொல் தருக.**

1. வணிகன் - ..........................................
2. அரவம் - ..........................................
3. சக்கரம் - ..........................................
4. வைகறை - ..........................................
5. போற்றுதல் - ..........................................

**06) சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

1. கரடி (கத்தும், உறுமும்)
2. எருமை (முக்காரமிடும், கதறும்)
3. புறா (புறுபுறுக்கும், குறுகுறுக்கும்)

**07) கீழே தரப்பட்ட சொற்களில் உள்ள வழுக்களைத் திருத்தி எழுதுக.**

1. பூசிணி - ..........................................
2. கிணத்தடி - ..........................................
3. ஏப்பை - ..........................................
4. வாரன் - ..........................................
5. ஈக்கு - ..........................................

**08) இடைவெளியில் வர வேண்டிய சொல்லைக் குறிக்க.**

1. நான் பிடித்த .......................................... கால்.
2. வல்லவனுக்கு .................................. ஆயுதம்.
3. இரக்கப் .................................... சிறக்கப் போ.

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

### சுற்றாடல்

(செப்டெம்பர் 14 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) | 01. 3 | 02. 1 | 03. 2 | 04. 2 | 05. 3 |
| | 06. 2 | 07. 3 | 08. 1 | 09. 4 | 10. 4 |

02)
01. எள், தேங்காய், கறுவா, வேம்பு
02. கும்மி, கரகாட்டம்
03. மண்பாத்திரம்
04. வேப்பிலை, வெற்றிலை, புளியமிலை, தூதுவளை
05. கப்பி, ஆப்பு, நெம்புகோல், சில்லும் அச்சாணியும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 03) | 01. (✗) | 02. (✓) | 03. (✓) | 04. (✗) | 05. (✓) |
| | 06. (✗) | 07. (✓) | 08. (✓) | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனம் ஆடும் நெப்த்தலின் உருண்டைகள்





உடுதுணிமணிகளை பூச்சிகள் அரிக்காதிருப்பதற்காக போடப்படும் வாசனைமிகு வெள்ளை நிற உருண்டையே 'நெப்த்தலின்' எனப்படுகின்றது. இன்று நாம் இந்த நெப்த்தலின் உருண்டைகளைப் பயன்படுத்தி சிறிய பரிசோதனை ஒன்றினை மேற்கொள்ளப் போகின்றோம். அதாவது நாம் நெப்த்தலின் உருண்டைகளை நடனம் ஆட செய்யப் போகின்றோம்.






## விஞ்ஞான விந்தைகள்

### தேவைப்படுபவை:

- ★ நெப்த்தலின் உருண்டைகள் சில
- ★ வினாகிரி
- ★ பேக்கிங் சோடா
- ★ நீர்

### இவ்வாறு செய்வோம்

★ கண்ணாடிக் குவளையின் அரைப் பகுதியினை நீரால் நிரப்பிக் கொள்ளுங்கள்.


★ அந்த குவளையில் நான்கின் ஒரு பங்கு வினாகிரியையும் ஒரு தோக்கரண்டி பேக்கிங் சோடாவையும் இட்டுக் கலந்து கொள்ளவும்.

★ அந்த நீர் குவளையில் நெப்த்தலின் உருண்டைகள் சிலவற்றை இட்டு, மாற்றங்களை அவதானியுங்கள். உங்களது பரிசோதனை படிமுறைகள் சரியாயின் இப்பொழுது நெப்த்தலின் உருண்டைகளின் நடனத்தை உங்களால் அவதானிக்க முடியும்.

### நடைபெறுவது என்ன?

நீருடன் பேக்கிங் சோடாவினையும் வினாகிரியையும் கலக்கும்போது, ஏற்பட்ட ரசாயன மாற்றத்தால் காபனீரொட்சைட் உருவாகின்றது. இதனால் நெப்த்தலின் உருண்டைகளின் மேற்புறத்தில் குமிழ்கள் உருவாகின்றன. இந்த குமிழ்கள் உருண்டைகளை தூக்கும் அளவுக்கு தீவிரமடைவதனால் உருண்டைகள் கண்ணாடியின் மேலே பயணிக்கின்றன. இதன்போது, சில காற்றுக் குமிழ்கள் வெளிப்பட்டு மேல்நோக்கிச் செல்வதால் மீண்டும் உருண்டைகள் கண்ணாடியின் அடியினை நோக்கிப் பயணிக்கின்றன. இவ்வாறு உருண்டைகள் மேலும் கீழும் பயணிப்பது நமது கண்களுக்கு நடனம் ஆடுவதைப் போல் தோற்றமளிக்கின்றது.

### கண்டுபிடியுங்கள்




இந்த படத்தில் மறைந்திருப்பவர் இலங்கை மக்களின் கல்விக்காக அளப்பரிய தொண்டாற்றியவர். இவரை கண்டுபிடியுங்கள் பார்ப்போம்.

[விடை:- 22 ஆம் பக்கத்தில்]

# எரித்திரியா

கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள எரித்திரியா 1890 முதல் இத்தாலியரின் ஆட்சிக்குட்பட்டது. அதன்பின்னர் 1941 ஆம் ஆண்டில் பிரித்தானியரின் ஆட்சியின்கீழ் வந்ததோடு, 1952 முதல் ஆட்சி ஆணைகளின்கீழ் இந்நாடு இருந்தது. அதனை தொடர்ந்து 1991 ஆம் ஆண்டில் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக 1993 ஆம் ஆண்டளவில் சுதந்திரம் பெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தின் பாற்கடல்







கண்டி தலதா மாளிகையை கண்டு தரிசிக்கும் அனைவரும் பெரும்பாலும் கண்டி வாவியைக் கண்டு மகிழ்வார்கள். கண்டி வாவியானது, (பாற்கடல்) தலதா மாளிகைக்கருகில் 1807 ஆம் ஆண்டில் கண்டி இறுதி மன்னனான விக்ரம இராஜசிங்கன் மன்னனால் அமைக்கப்பட்டது.

1807 ஆம் ஆண்டு கண்டி தலதா மாளிகைக்கருகில் சிறிய தடாகம் ஒன்றினை அமைக்கும் நடவடிக்கைகளின்பொழுது வெண்நிற ஆமை ஒன்று வெளிப்பட்டதாகவும் அதனைக் கண்ணுற்ற வேத சாஸ்திரியரான 'ஹுலங்கமுவே' அந்த இடத்தில் நீர்த்தேக்கம் ஒன்றை அமைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என கூறியதாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. நீர்த்தேக்கத்தின் மத்தியில் மன்னனால் பயன்படுத்தப்பட்ட கட்டடமான 'உலுபென்கே' வை இன்றும் நாம் காணலாம்.

1810 ஆம் ஆண்டளவில் ஹீல்பென் கந்துர, அதற்கு நீர் வழங்கும் சரணங்கர ஓடை, ரஜபிஹில்ல ஆறு ஆகியவற்றை மறித்து இந்த வாவியை விரிவாக்கும் பணிகள் ஆரம்பமாகின. 1812 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வாவியின் கட்டுமானப் பணிகள் யாவும் நிறைவெய்தின. இந்த வாவியை செங்கடகலை பாற்கடல், செங்கடகலை வாவி, அலகொலவாவி, போகம்பர வாவி, கண்டி வாவி போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





இந்த வாவிக்கரையில் பல்வேறு வகையான தாவரங்களைக் காணலாம். நாகை, மாரை, மா, பனை, கருங்காலி, முதிரை, இலவம் உள்ளிட்ட பல மரங்கள் இங்கு காணப்படுகின்றன. இந்த வாவியில் லட்சக் கணக்கான மீன்கள் வாழ்கின்றன. அத்தோடு, வாவிக்கருகில் கொக்கு, நீர்க்காகம், வாத்து உள்ளிட்ட பல்வேறு பறவைகளும், உடும்பு, உள்ளிட்ட பல்வேறு வகையான ஊர்வனவற்றையும் காணலாம். (-அ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போல்பொயின்ட் பேனா



இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே, போல்பொயின்ட் பேனாவுக்கான அமைப்பு முறை கண்டுபிடிக்கப்பட்டது. இருப்பினும் அதில் பல குறைபாடுகள் இருந்தன. இதனால், மக்கள் மத்தியில் அவை பிரசித்தி பெறவில்லை. ஆனால், **1943** ஆம் ஆண்டில் தான் தங்கு தடையின்றி இலகுவாக எழுதும் போல்பொயின்ட் பேனாக்கள் உருவாக்கப்பட்டன. இந்தப் பேனாக்களை உருவாக்கியவர்கள் அமெரிக்கர்களே.

ஒருமுறை அமெரிக்க விமானப்படை வீரர்கள் விமானத்தில் பறக்கும் பொழுது, காற்றழுத்தத்தினால் சாதாரண பேனாவிலிருந்து மை சிந்தியுள்ளது. அப்போது தான் காற்றழுத்தத்தினால் மை சிந்தாத பேனாவைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த முயற்சியில் அவர்களுக்கு வெற்றியும் கிடைத்தது.

இவ்வாறே போல்பொயின்ட் பேனா அறிமுகமானது.

(-அ)

# சுருக்கத்தின் விரிவாக்கம்

ஆங்கில மொழியில் சில விடயங்கள் குறிப்பிடப்படும்போது, சுருக்க எழுத்துக்களைக் கொண்டு அவை குறிப்பிடப்படுவதுண்டு. அவ்வாறு குறிப்பிடப்படுகின்ற சில சுருக்க எழுத்துக்களின் விரிவாக்கம் வருமாறு...

| | |
|---|---|
| PTO - Please Turn Over | L - Large |
| BC - Birth Certificate | XL - Extra Large |
| IC - Identity Card | XXL - Extra Extra Large |
| CD - Compact Disc | KT - Karat |
| DVD - Digital Video Disc | CV - Carriculum Vitae |
| OT - Over Time | |
| C/O - Care Of | |
| L/H - Left Hand | |
| R/H - Right Hand | |
| M - Medium | |




உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது


wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


noolaham.org | aavanaham.org

# கல்வியைப்

# உடற்பயிற்சியு









உடல் மற்றும் உள்ளம் ஆரோக்கியமாக இருப்பதற்கு உடற்பயிற்சி செய்வது மிகவும் அவசியமாகும். சிறு வயது முதலே உடற்பயிற்சி செய்பவர்களுக்கு நோய்கள் ஏற்படுவது குறைவு என்று ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால், இன்று பாடசாலை செல்லும் பிள்ளைகள் பலருக்கு போதுமான உடற்பயிற்சிகள் கிடைப்பதில்லை. இதனால், ஓடி விளையாட வேண்டிய பருவத்தில் அவர்கள் நோயாளிகளாக மாறுகின்றனர். எனவே, உடற்பயிற்சியின் அவசியம் பற்றி இங்கு பார்ப்போம்.

## உடற்பயிர்சி என்பது...

உடலுக்கு களைப்பினை ஏற்படுத்தும் ஏதேனுமொரு செயற்பாட்டில் ஈடுபடுவ தனையே 'உடற்பயிற்சி' என்கின்றோம். இது உடல் முழுவதற்கும் ஏற்றதாக அமைவது சிறந்தது.

கிரிக்கெட், கூடைப்பந்து, கரப்பந்து, கால்பந்து போன்ற அனைத்து விளை யாட்டுக்கள் மூலமும் உடற்பயிற்சி கிடைக்கின்றது. ஆனால், உடற்பயிற்சி யினை மேற்கொள்வதற்காக கட்டாயம் ஏதேனுமொரு விளையாட்டில் ஈடுபட வேண்டும் என்ற அவசியம் இல்லை. மாறாக நடத்தல், ஓடுதல், வீட்டு வேலைகள் செய்தல் என உடலைக் களைப்புறச் செய்யும் எந்தவொரு செயற்பாடும் உடற்பயிற்சியாகத்தான் அமைகின்றது.




## உலக சுகாதார அமைப்பின் பரிந்துரை

வயது வந்தவர்கள் நாள் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது அரை மணித்தியாலமேனும் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்துள்ளது. பிள்ளைகளாயின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ப் போன்றே ...யும் அவசியம்

ஆகக்குறைந்தது நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலம் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும். இது சிறந்த ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையும்.

## உடற்பயிற்சி கிடைக்காமைக்கான காரணங்கள்

இன்று பெரும்பாலான சிறுவர்கள் வாகனங்களிலேயே பாடசாலை செல்பவர்களாக உள்ளனர். இதனால், நடந்து செல்ல வேண்டிய தேவை இல்லாமல் போய்விடுகின்றது. பாடசாலை முடிந்ததும் மேலதிக வகுப்புக் களுக்குச் செல்லும் வழக்கமும் சிறுவர்களிடத்தில் காணப்படுகின்றது. இதனால், மாலையில் களைப்புற்று வீட்டுக்கு வரும் சிறுவர்கள், விளையாட்டுக்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கின்றனர். தொலைக்காட்சி பார்த்தல், கணினி விளையாட்டுக்களில் ஈடுபடல் என்பனவே அவர்களின் நாளாந்த விடயங்களாக அமைந்துவிடுகின்றன. இவையனைத்தும் ஒரே இடத்தில் அமர்ந்து செய்யப்படும் வேலைகள் என்பதனால், உடலுக்குத் தேவையான உடற்பயிற்சிகள் கிடைப்பதில்லை.

## ஒரு மணித்தியாலமேனும் உடற்பயிற்சி செய்யுங்கள்

ஒவ்வொருவரும் உங்களுக்கு கிடைக்கும் நேரத்திற்கு ஏற்ப நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலமேனும் உடற்பயிற்சி செய்யுங்கள். வீட்டில், பாடசாலையில், வகுப்பறையில் என எந்த இடத்திலேனும் உடற்பயிற்சி செய்யலாம். பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய பொழுதுகளில் உடலை அசைத்து விளையாடும் விளையாட்டுக்களில் ஈடுபடுங்கள். வீட்டில் இருக்கும் நேரங்களில் வாகன நெரிசலற்ற இடங்களில் சைக்கிள் ஓட்டுங்கள். நடன வகுப்புக்குச் செல்லுங்கள். கிரிக்கெட், எல்லே, ஓடி விளையாடல் என ஏதாவதொரு விளையாட்டில் ஈடுபடுங்கள். வீட்டுத்தோட்டத்தில் அல்லது வீட்டில் ஏதாவது வேலைகள் இருந்தால் அவற்றை செய்யுங்கள். கிணறு இருந்தால் அம்மா/ அப்பாவுடன் கிணற்றுக்கு சென்று குளியுங்கள். முற்றத்தில் புல் பிடுங்குதல், பூஞ்செடிகள் நாட்டுதல், பயிர்களுக்கு நீரூற்றுதல் என ஏதாவதொன்றைச் செய்யுங்கள். இவை அனைத்தும் உடற்பயிற்சிகளாகும்.

## பாடசாலையில் உடற்பயிற்சி

பாடசாலை நேரத்தில் நீங்கள் பல உடற்பயிற்சிகளை மேற்கொள்ள முடியும். ஒரு சில பாடசாலைகளில் காலை வேளைகளில் உடற்பயிற்சிகள் நடைபெறுகின்றன. மேலும், விளையாட்டுக்கள் மட்டுமன்றி; பாடசாலை சிரமதானங்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு சங்கம், சாரணர் இயக்கம் என்பனவற்றில் இணைந்து கொண்டால், அவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளினாலும் உடற்பயிற்சி கிடைக்கின்றது.

## உடற்பயிற்சி செய்வதால் கிடைக்கும் நன்மைகள்




உடலுக்கு பயிற்சி கிடைக்கும்போது, உடல் உற்சாகம் அடையும். தசைகளுக்கு ஒட்சிசன் கடத்தப்படும். இதயத் துடிப்பு சீராகும். உடல் அவயவங்களுக்கு பயிற்சி கிடைக்கும். குருதிச் சுற்றோட்டம் சீராக இடம்பெறும். ஆக, உடற்பயிற்சியின்போது, எமது உடலுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. இந்த அனைத்து செயற்பாடுகளிலும் எமது உடல் நன்கு வளர்ச்சி அடைகின்றது. எலும்புகளும் உறுதியடைகின்றன.

உடலுக்கு ஏற்ற விதத்தில் எந்தவோர் உடற்பயிற்சி கிடைத்தாலும், அது உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு அடிப்படையாகவே அமையும். உடற்பயிற்சிகள் திறமையான மாணவர்களை உருவாக்குகின்றன. உடல் சுறுசுறுப் பான மாணவர்கள் பாடசாலை வாழ்விலும் சமூக வாழ்விலும் திறமையானவர்களாக திகழ்கின்றனர். அந்தவகையில், உடற்பயிற்சியினை சரியான முறையில் செய்பவர்களால் நன்கு கல்வி கற்க முடியும். இத்தகையவர்களிடத்தில் சிறந்த ஆளுமை விருத்தி ஏற்படும். இதனால், ஏனையவர்கள் மத்தியில் இவர்கள் சிறப்பாக தெரிவார்கள்.

உடற்பயிற்சி செய்யாத சிறுவர்கள் உடல் ரீதியாக வும் மன ரீதியாகவும் பலவீனமடைந்தவர்களாக காணப்படுவர். அவர்கள் அடிக்கடி சோர்வடைவர். தவறான உணவு முறைகள், ஒரே இடத்தில் நீண்ட நேரம் அமர்ந்திருத்தல் என்பன உடற்பருமனை அதிகரிக்கின்றன. உடலில் கொழுப்பு சேர்வதனாலேயே இந்நிலை ஏற்படுகின்றது. இதனால் இவ்வாறானவர்கள் தொற்றாத நோய்ப் பாதிப்புகளுக்கு விரைவில் ஆளாவார்கள். உடற்பயிற்சி செய்யாமல் இருக்கும்போது உடலும் மனமும் சுறுசுறுப்பு இன்றி இருக்கும். இவ்வாறான நிலையில் பிரச்சினைகள் ஏற்பட்டால் அவற்றை சமாளிப்பது எப்படி?, பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பன குறித்த தெளிவு, தைரியம் இல்லாமல் போகும். உடற்பயிற்சியில் ஈடுபடும் சிறுவர்களால்தான் இலகுவாகவும் தைரியமாகவும் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியும். அவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் பலமும் உறுதியும் கொண்டவர்களாகக் காணப்படுவர்.








- பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் சுழியோடியவாறு புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த புகைப்படக் கலைஞரையும் அவரது புகைப்படக் கருவியையும் ராட்சத ஒக்டொபஸ் ஒன்று பற்றிப் பிடித்துக் கொண்டமை தொடர்பான படங்களையே இங்கு காண்கிறீர்கள்.





டேவிட் மெல்வெஸ்டுட்டோ, தனது கெமராவை மீட்டெடுப்பதற்காக ஒக்டொபஸ்ஸுடன் போராடும் காட்சி



படம் எடுக்கும்போது வெளியான ஒளி அலைகளுக்கு அஞ்சிய ஒக்டொபஸ், கெமராவைக் கைவிட்டு தப்பிச் சென்றது

ஆழ்கடல் புகைப்படப்பிடிப்பும் ஒக்டொபஸ்ஸுடனான மோதலும்

# கெமராவைப் பறிக்க முயன்ற ராட்சத ஒக்டொபஸ்

கெலிஃபோர்னியாவின் காமெல் கடற்கரைக்கு அப்பால் உள்ள ப்ளூஃபிஷ் கோவ் எனும் இடத்தில் தான் புகைப்படக் கலைஞரான டேவிட் மெல்வெஸ்டுட்டோவுக்கும் ராட்சத ஒக்டொபஸ்ஸுக்கும் இடையில் போராட்டம் நடந்துள்ளது. டேவிட் மெல்வெஸ்டுட்டோ, தொழில் ரீதியில் ஆழ்கடல் புகைப்படப்பிடிப்பாளர் ஆவார். கெலிஃபோர்னியா கரையோரத்தை அண்டியுள்ள கடற்பரப்பில்தான் டேவிட்டும் அவரது நண்பரான வொரன் முரே என்பவரும் ஆழ்கடல் தொடர்பான புகைப்படமெடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுதுதான் இந்த திகிலூட்டும் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி டேவிட்டின் உதவியாளரான வொரன் முரே, சி.பி.எஸ் செய்தி சேவையிடம் தெரிவிக்கும் போது;

“நான் முதலில் இந்த ராட்சத உயிரினத்தைப் பார்த்ததும் ஆச்சரியத்தில் உறைந்து போனேன். கடல் மேற்பரப்பில் இருந்து 80 அடி ஆழத்தில் இவ்வாறான உயிரினத்தினை இதற்கு முன்னர் பார்த்ததே இல்லை. எதிர்பாராத நிலையில், அந்த ராட்சத ஒக்டொபஸ் தனது ஒரு கொடுக்கினை நீட்டி டேவிட்டின் கெமராவைப் பற்றிப்பிடித்துக் கொண்டது. இந்தக் காட்சியை எப்படியாவது வீடியோ எடுக்கவேண்டும்; இல்லாவிட்டால் இந்த சம்பவத்தினை எவரும் நம்ப மாட்டார்கள் என்று எனக்குத் தோன்றியது. இதனால், பெரும் சிரமத்தின் மத்தியில் இக்காட்சியை நான் வீடியோ எடுத்தேன்” என்றார்.

அச்சந்தர்ப்பத்தில், டேவிட் தனது கெமராவைக் கைவிடாமல், அதனை நன்கு இறுகப் பிடித்துக்கொண்டு அந்த ராட்சத ஒக்டொபஸ்ஸிடமிருந்து கெமராவை மீட்டெடுக்கப் போராடியுள்ளார். இதனை உதவியாளரான வொரன் முரே வீடியோ எடுத்துள்ளார். அப்போது கெமராவிலிருந்து வெளியான ஒளி அலைகளுக்கு அஞ்சிய குறித்த ராட்சத ஒக்டொபஸ், அதனைக் கைவிட்டுவிட்டு தப்பிச் சென்றதாக தெரிவிக்கப் படுகின்றது.

(-அ)



ராட்சத ஒக்டொபஸ் ஒன்றின் வைப்பகப் படம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பசுமை நகரத் திட்டங்கள்

**பா**துகாப்பான பசுமை நகரங்களை அமைக்கும் திட்டங்கள் இன்று உலகெங்கிலும் பிரபல்யம் பெற்று வருகின்றன. சுதந்திரம், பொழுதுபோக்கு, இயற்கை அழகு போன்றவற்றை தேடிச்செல்லும் பலர் இந்த பசுமை நகரங்களை விரும்புகின்றனர்.

இலங்கையிலுள்ள வனங்களின் அளவு இன்றளவில் 29 சதவீதம் ஆகக் குறைவடைந்துள்ளது. தற்போதளவில் உலகின் பெரும்பாலான நாடுகள் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

காற்று மாசடைதல்,எதிர்பாராத வெள்ளப் பெருக்கு என்பனவற்றுக்கு காரணம், பசுமையின்மையாகும். பசுமை இல்லாத சுற்றாடல் மக்களின் ஆரோக்கியத்திற்கும் கேடு விளைவிப்பதாகவே உள்ளது. இதன் காரணமாகத்தான் உலகில் பசுமை நகரங்களை அமைக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தொழில்நுட்ப ரீதியில் உருவாக்கப்படும் பசுமை நகரங்கள், சன நெரிசல் மிக்க பசுமை நகரங்கள், எரிசக்தி உற்பத்தி பசுமை நகரங்கள் என பல்வேறு பசுமை நகரத் திட்டங்கள் இதில் அடங்கும்.

நகரங்களை அண்மித்ததாக வேறு பிரித்து அமைக்கப்பட்டுள்ள சிறிய வனாந்தரங்கள் மற்றும் மரநடுகைத் திட்டங்கள் இவற்றுள் பிரசித்திபெற்றவையாகும். மேலும், நீரா தாரப் பகுதிகளில் உள்ள ஈரநிலங்கள், சதுப்பு நிலங்கள் போன்றவற்றை விசேடமாக பாதுகாத்தல் என்பனவும் இந்நகரங்களில் பரவலாகக் காணக் கூடியதாக இருக்கும். அத்துடன், வைத்தியசாலை, அரச நிறுவனங்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் விசேட தாவர செயற்றிட்டங்களும் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளன.


பசுமை நகரத் திட்டங்களுக்கு ஆகக்குறைந்த காபன் விரயமாகின்ற போக்குவரத்து கட்டமைப்பு, பசுமை முதலீட்டு நடைமுறைகள், பசுமை நிலையங்கள், பசுமை தொழில்நுட்பம், பசுமை பயிர்ச் செய்கை திட்டங்கள் மற்றும் பசுமை கல்வி வலயங்கள் என்பன அடிப்படை விடயங்களாக உள்ளன. பசுமை நகரத்திட்டங்களுக்கமைய, சுற்றாடலுக்கு உகந்த போக்குவரத்து சாதனமாக சைக்கிள் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், சைக்கிளின் பயன்பாடு ஆரோக்கியத்திற்கு உகந்ததாகவும் கருதப்படுகின்றது. இதனால், வீதி விபத்துக்களும் வளி மாசடைவும் வாகன நெருக்கடியும் கட்டுப்படுத்தப்படுகின்றன. நகருக்கு வெளியே தனியார் போக்குவரத்து சேவைகளை நிறுத்தி, நகருக்குள் நுழைவதற்கு பொது போக்குவரத்து சேவைகளை அறிமுகப்படுத்துவது இந்த திட்டத்தின் ஒரு நோக்கமாகும்.

நீர், நிலம், தாவரத் தொகுதிகள் மற்றும் வனஜீவிகள் போன்ற பலதரப்பட்ட சுற்றாடல் அம்சங்களைக் கொண்டதாகவே இந்த பசுமை நகரங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. இத்தகைய பசுமை நகரத் திட்டங்கள் மனித வாழ்க்கைக்கு மிகவும் உகந்ததாகும்.





## பேராதனையிலிருந்து காலநிலை வரைபடம்



இலங்கையின் மழைவீழ்ச்சி, வெப்பநிலை மற்றும் நீர் ஆதார மாற்றங்கள் பற்றிய தரவுகளை ஆராய்ந்து வரைபடமாக்கும் ஆராய்ச்சி ஒன்று பேராதனை பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. விவசாய பொறியியல் திணைக்களத்தின் கலாநிதி பத்மராஜாவின் தலைமையில் இந்த ஆராய்ச்சி நடத்தப்படுவதுடன், தேசிய ஆராய்ச்சி சபை இதற்கு நிதிப் பங்களிப்பினை வழங்குகின்றது.

மழைவீழ்ச்சி, அதிக வெப்பநிலை, வெள்ளம் மற்றும் எதிர்பாராத மண்சரிவு என்பன பற்றி கடந்த காலங்களில் அதிகம் பேசப்பட்டது. இந்த விபரீதமான காலநிலை மாற்றங்கள் குறித்து விசேட தகவல்களைப் பற்றிய ஆராய்ச்சிகளும் இதன்போது இடம்பெறவுள்ளன. இதனூடாக, விபரீதமான காலநிலை மாற்றங்கள் ஏற்படும் இடங்கள், ஏற்படக் கூடிய தடவைகள், அபாயம் நிலவும் இடங்கள் மற்றும் காலவரையறை குறித்து இலகுவாக தரவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

අම්මා: දුව, වෙලා ගියා නැගිටින්න.
துவ, வெலா கியா நெகிடின்ன.
**அம்மா: மகள், நேரமாயிற்று எழும்புங்கள்.**

දුව: දැන් වෙලාව කීයද?
தென் வெலாவ கீயத?
**மகள்: இப்போது நேரம் என்ன?**

අම්මා: දැන් උදේ හයයි තිහයි.
தென் உதே ஹயய் திஹய்.
**அம்மா: இப்போது காலை ஆறு மணி முப்பது நிமிடங்கள்.**

දුව: තව වෙලා තියෙනවනේ අම්මා.
தவ வெலா தியெனவனே அம்மா.
**மகள்: இன்னும் நேரம் இருக்கிறதுதானே அம்மா.**

අම්මා: දුව, අද විභාගය නේද? උදේ අටට පාසලේ ඉන්න කිව්වා නේද?
துவ, அத விபாகய நேத? உதே அட்டட்ட பாசலே இன்ன கிவ்வா நேத?
**அம்மா: மகள், இன்று பரீட்சை அல்லவா? எட்டு மணிக்குப் பாடசாலையில் இருக்கச் சொன்னார்கள் தானே?**

දුව: ඔව් අම්මේ. මම ලෑහැස්ති වෙන්නම්.
ஒவ் அம்மே. மம லெஹெஸ்தி வென்னம்.
**மகள்: ஆம் அம்மா. நான் ஆயத்தமாகிறேன்.**

අම්මා: ඉක්මණට මුහුණ සෝදගෙන එන්න.
இக்மணட்ட முஹுண சோதகென என்ன.
**அம்மா: சீக்கிரம் முகம் கழுவிக்கொண்டு வாருங்கள்.**

දුව: උදේට කන්න තියෙන්නේ මොනවද අම්මේ?
உதேட்ட கன்ன தியென்னே மொனவத அம்மே?
**மகள்: காலையில் சாப்பிட என்ன இருக்கு அம்மா?**

අම්මා: මම කිරිබත් හැදුවා දුව.
மம கிரிபத் ஹெதுவா துவ.
**அம்மா: நான் பாற்சோறு சமைத்தேன் மகள்.**

**சாப்பிட்டு முடித்த பின்னர்...**

දුව: මම ගිහින් එන්නම් අම්මේ.
மம கிஹின் என்னம் அம்மே.
**மகள்: நான் போய் வருகிறேன் அம்மா.**

අම්මා: හොඳයි දුව. විභාගය හොඳින් ලියන්න.
දුවට දෙවි පිහිටයි.
ஹொந்தய் துவ.
விபாகய ஹொந்தின் லியன்ன. துவட்ட தெவி பிஹிட்டய்.
**அம்மா: நல்லது மகள். பரீட்சையை நன்றாக எழுதுங்கள். மகளுக்கு கடவுள் துணை.**



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. දැන් ............ කීයද?
2. .......... සෝදගෙන එන්න.
3. මම ............ හැදුවා.




## தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
## Direct speech & Indirect speech

நிகழ்கால வினை முற்று வாக்கியம் (Present perfect tense) மற்றும் இறந்தகால தனி வாக்கியம் (Past simple tense) ஆகியவற்றை தன்கூற்று நிலையில் இருந்து, பிறர் கூற்று நிலை வாக்கியங்களாக மாற்றியமைக்கும் போது ஏற்படும் மாற்றங்களை மேலும் இங்கே அவதானிப்போம்.

### நிகழ்கால வினைமுற்று வாக்கியம் (Present perfect tense)

அ) Ravi said, "I have returned the pen."
ரவி கூறினான்,"நான் பேனாவைத் திருப்பிக்கொடுத்துவிட்டேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஆ) Ravi said that he had returned the pen.
தான் பேனாவைத் திருப்பிக்கொடுத்துவிட்டதாக ரவி கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect speech)

★ ★ ★ ★

### இறந்தகால தனி வாக்கியம்/ Past simple tense

இ) Ravi said, "I returned the pen yesterday."
ரவி கூறினான்,"நான் பேனாவை நேற்றுத் திருப்பிக்கொடுத்தேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஈ) Ravi said that he had returned the pen the previous day.
தான் பேனாவை நேற்றுத் திருப்பிக்கொடுத்ததாக ரவி கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect speech)

★ **மேற்காணும் (அ மற்றும் இ) தன் கூற்று வாக்கியங்களின்படி;**

அ) I have returned. (Present perfect)
நான் திருப்பிக்கொடுத்துவிட்டேன். (நிகழ்கால வினைமுற்று)

இ) I returned. (Past simple tense)
நான் திருப்பிக்கொடுத்தேன். (இறந்தகால தனி வாக்கியம்)

★ ★ ★ ★

### நிகழ்கால வினைமுற்று வாக்கியம் (Present perfect tense)

உ) Radhi said, "I have lost my parcel."
ரதி கூறினாள், "நான் எனது பொதியை தொலைத்துவிட்டேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஊ) Radhi said that she had lost her parcel.
தான் தனது பொதியை தொலைத்துவிட்டதாக ரதி கூறினாள்.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect speech)

### இறந்தகால தனி வாக்கியம் (Past simple tense)

எ) Radhi said, "I lost my parcel yesterday."
ரதி கூறினாள், "நான் எனது பொதியை நேற்றுத் தொலைத்தேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஏ) Radhi said that she had lost her parcel yesterday.
தான் தனது பொதியை நேற்றுத் தொலைத்ததாக ரதி கூறினாள்.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect speech)

★ **மேற்காணும் (உ மற்றும் எ) தன் கூற்று வாக்கியங்களின்படி;**

உ) I have lost.
நான் தொலைத்துவிட்டேன்.

எ) I lost.
நான் தொலைத்தேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடளாவிய ரீதியில்

# பாடசாலை மட்டத்திலான கால்பந்தாட்ட போட்டிகள்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படுகின்ற 15 வயதிற்கு கீழானோருக்கான கால்பந்தாட்ட போட்டித் தொடர் இம்மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளதுடன், இப்போட்டிகள் ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதிவரை நடைபெறும். அதன்படி 25 மாவட்டங்கள் மற்றும் 32 கல்வி வலயங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் 650 பாடசாலைகளிலிருந்து 12,000 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் இப்போட்டியில் கலந்துகொள்கின்றனர்.

இதன் முதல் சுற்றுப்போட்டிகள் மாவட்ட, வலயப் பகுதிகளில் நடைபெறுவதுடன், இறுதிச் சுற்றுப்போட்டிகள் ஒக்டோபர் 28,29,30,31 ஆம் திகதிகளில் பொலன்னறுவையில் நடைபெறவுள்ளது. மேற்படி தொடரில் காட்டப்படுகின்ற திறமைகளின் அடிப்படையில் சிறந்த வீரர், சிறந்த வீராங்கனை, சிறந்த கோல் காப்பாளர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணியை பங்களாதேஷ் முந்துகிறது

ஐ சி சி யின் ஒருநாள் சர்வதேச தரப்படுத்தல் பட்டியலில் இலங்கை அணியை பங்களாதேஷ் அணி முந்திக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது.




இலங்கை-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையே நடந்து முடிந்த ஒருநாள் போட்டித் தொடரை இலங்கை அணி 4-1 என்ற கணக்கில் இழந்ததையடுத்தே, ஒருநாள் போட்டி தரப்படுத்தல் வரலாற்றில் முதல் தடவையாக இலங்கையை விட பங்களாதேஷ் அணி முன்னேற்றத்தைக் காணமுடிந்துள்ளது.

இலங்கை அணி ஆஸி அணியிடம் பெற்ற தோல்வியையடுத்து 101 புள்ளிகளுடன் தரப்பட்டியலில் 6 ஆவது இடத்தில் உள்ளது. தற்போதைக்கு 98 புள்ளிகளுடன் தரப்பட்டியலில் 7 ஆம் இடத்திலுள்ள பங்களாதேஷ் அணி ஆப்கானிஸ்தானுடனும், இங்கிலாந்துடனும் போட்டித் தொடர்களில் ஈடுபடவுள்ளது. இதில் கிடைக்கக்கூடிய வெற்றிகளின் ஊடாக, இலங்கை அணியை பங்களாதேஷ் அணி முந்தக்கூடும்.

விஜய் ஸ்போர்ட்ஸ்

# செரினா வில்லியம்ஸின் ஆதிக்கம் சரிவு கண்டது

உலகின் அசைக்க முடியாத டென்னிஸ் வீராங்கனை என்ற அந்தஸ்தை கடந்த 186 வாரங்களாக தனதாக்கிக் கொண்டிருந்த அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் அந்த தனித்துவத்தை இழந்தவராகிவிட்டார்.

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் போட்டியிலேயே செரினா வில்லியம்ஸ் இந்நிலைமைக்கு ஆளாகினார். மேற்படி போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் ஜேர்மனியின் என்ஜலிக் கர்பரிடம் தோல்வியுற்றதன் காரணமாகவே, செரினா வில்லியம்ஸின் டென்னிஸ் ஆதிக்கம் இவ்வாறு சரிவைக் கண்டது. இத்தோல்விகளின் காரணமாக, மகளிர் டென்னிஸ் தரப்படுத்தலில் இதுவரை கடந்த 186 வாரங்களாக முதலிடத்தை தக்கவைத்து வந்த செரினா முதல் தடவையாக பின்னடைவை சந்தித்துள்ளார்.



2013 ஆம் வருடம் பெப்ரவரி தொடக்கம் 2016 செப்டெம்பர் வரை தரப்படுத்தலில் செரினா முதலாவது இடத்தையே வகித்து வந்தார். அதன்படி, இதுவரை உலகில் அதிக காலம் முதலாவது இடத்தை வகித்தவர்களில் ஜேர்மனியின் ஸ்டெஃபி கிராஃப்புடன் செரினா வில்லியம்ஸ் சமநிலை சாதனையாளராக திகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அஃப்ரிடி ஓய்வு...?

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அஃப்ரிடி தனது ஓய்வை அறிவிக்கவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தொடர்ச்சியாக அஃப்ரிடி தனது திறமையை வெளிப்படுத்த தவறி வருவதன் காரணமாக, அவரை ஓய்வு பெறுமாறு



பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அழுத்தம் தெரிவித்தமையினாலேயே அஃப்ரிடி ஓய்வை அறிவிக்கவுள்ளாராம்.

# இந்தியா-நியூஸிலாந்து போட்டித் தொடர்

இந்தியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையே டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர் செப்டெம்பர் 22 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன.




கால அட்டவணை வருமாறு:

| டெஸ்ட் போட்டிகள் | ஒருநாள் போட்டிகள் | |
|---|---|---|
| 1 ஆம் டெஸ்ட் - செப். 22-26 | 1 ஆம் போட்டி - ஒக். 16 | 4 ஆம் போட்டி - ஒக். 26 |
| 2 ஆம் டெஸ்ட் - செப். 30- ஒக் 04 | 2 ஆம் போட்டி - ஒக். 20 | 5 ஆம் போட்டி - ஒக். 29 |
| 3 ஆம் டெஸ்ட் - ஒக். 08-12 | 3 ஆம் போட்டி - ஒக். 23 | |




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூரை முடிச்சுப் பற்றி பார்ப்போம்

## விஜய் சாரணர் உலகம்

சாரணரின் பயணப் பொதியில் உள்ள கூரைத் துணியினைப் பயன்படுத்தி துரிதகதியில் கூடாரம் ஒன்றினை வெற்றிகரமாக அமைக்க வேண்டுமாயின் கூரைத் துணியில் முடிச்சு ஒன்றினைப் போட வேண்டும். இங்கு அவ்வாறான முடிச்சு ஒன்றே காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, இப் படக்குறிப்பினை நன்கு அவதானியுங்கள்.




### கூரை முடிச்சு

1. படத்தில் உள்ளவாறு கல்லை கூரைத் துணியின் மீது வைத்து முடிச்சினை இடுங்கள்.

2. அதற்கு வட்ட வடிவிலான கற்களைப் பயன்படுத்த வேண்டும்.


### Y (வை) வடிவ தடி இரண்டினைப் பயன்படுத்துங்கள்

கூரைத் துணியின் உச்சியின் கீழ் பலகைத் துண்டை நிறுவுவதற்கு 'வை' வடிவ தடிகள் இரண்டினைக் கொண்ட ஈட்டிகளைப் பயன்படுத்துங்கள்.

கூரைத் துணியின் மீது உள்ள முடிச்சோடு, கயிறு ஒன்றைக் கட்டி அதனை 'வை' வடிவிலான ஈட்டியினூடாக அனுப்பி, தரையில் குத்தப்பட்டுள்ள குச்சியோடு கட்டுங்கள்.

**கவனிக்க:** கூரைத் துணியின் கீழ் சுவர் தரையில் கட்டுவதற்கு உரி[illegible] முடிச்சுகள் சிலவற்றை இடுங்கள்.


# சாரணர் முறையில் நீந்துவதற்கு கற்றுக்கொள்வோம்



அனைத்து சாரணர்களும் நீச்சலைக் கற்றுக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். இங்கு நீச்சலிலுள்ள மிக முக்கியமான மூன்று படிமுறைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

### முதலாவது படிமுறை

1



வீட்டில் உள்ள தண்ணீர் பேசனில் நீரை நிரப்பிக் கொள்ளுங்கள். உங்களது முகத்தினை அதில் சில செக்கன்களுக்கு மூழ்கச் செய்யுங்கள். இவ்வாறு செய்வதால் மூச்சை அடக்கிக் கொள்ளும் பயிற்சியைப் பெறுவீர்கள். பின்னர் உங்களது இடுப்பு வரையில் நீர் நிரம்பியுள்ள பாதுகாப்பான நீர் நிலையை தெரிவு செய்யுங்கள். நீரில் 10 செக்கன்களுக்கு மூழ்கி வாயை மூடிக் கொண்டு முன்னோக்கி வளையுங்கள்.

படத்தில் காட்டியுள்ளவாறு, கைகளால் கால்களைப் பிடித்துக்கொள்ளுங்கள். கால்களை நன்கு ஊன்றி நின்று கொண்டு முதுகினை வளைத்து நீரின் மீது இருந்தவாறு கைகளை அசையுங்கள். இவ்வாறு நீங்கள் சில நாட்கள் தொடர்ந்து பயிற்சி பெற்றால், நீந்தும்போது மூச்சை அடக்கிக்கொள்வதில் சிரமம் எதுவும் நேராது. எனினும், இப்பயிற்சிகள் மிகவும் அவதானமாகச் செய்யப்படல் வேண்டும்.

### இரண்டாவது படிமுறை

2




ஆழமற்ற நீரில் ஏதாவது ஒரு பொருளை இட்டு அதனை மீண்டும் வெளியில் எடுங்கள். அத்தோடு, 'ஸ்குரு' ஆணியை நீருக்குள் இட்டு அதனை நீருக்குள் இருந்துகொண்டே பொருத்துங்கள். நீங்கள் தேர்ந்தெடுத்த ஆணியின் நீளத்தினை அதிகரிப்பதன் மூலம் நீருக்குள் இருக்கும் நேரத்தினை அதிகரித்துக் கொள்ள முடியும்.

நீரின் மீது மேல்நோக்கிப் படுத்து மிதக்க முயலுங்கள். மூத்த சாரண உறுப்பினர்களின் உதவியுடன் உங்களது தலையினை நீர் மீது சமமாக வைத்துக்கொள்ளுங்கள். ஆழமற்ற நீரில் கரங்களை தரையில் ஊன்றிக்கொண்டு நீரின்மீது உடற்சமநிலையைப் பேணுங்கள். பின்னர் மிதந்துகொண்டு உங்களது கரங்களின் உதவியுடன் நீரில் நீந்த முயலுங்கள்.

### மூன்றாவது படிமுறை

3



சில நாட்கள் இந்த பயிற்சியினை மேற்கொண்ட பின்னர் உங்களது கரங்களோடு பாதங்களை நீரில் ஒரே தடவையில் அசைப்பதற்கு முயலுங்கள். இவ்வாறே நீங்கள் 'நீந்தும்' பயிற்சியினை தொடர்ந்து செய்யுங்கள்.

**குறிப்பு:** இப்பயிற்சியினை மேற்கொள்ளும்போது, சாரணர் பேராசிரியர் ஒருவர் அருகில் இருப்பது நல்லது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வழங்கப்பட்டுள்ள சொற்களுக்குரிய படங்களை பிரதான படத்தில் கண்டுபிடித்து '✓' அடையாளமிடுக

- A Glove
- A Car
- A Beach Ball
- A Rooster
- A Purse
- A Brush
- A Cake
- A Broom
- A Pair Of Boots
- A Comb




## அறிவுக்கு விருந்து (07.09.2016) விடைகள்












## பொருட்களுக்கான தமிழ்ச் சொற்கள் தருக




## விடை தருக




## சொற்களைப் புணர்த்தி எழுதுக




## குறுக்கெழுத்துப் போட்டி: 206




### மேலிருந்து கீழ்

01. நல்ல நேரம்.
02. உறுதி.
03. அலைகள் மோதிச் செல்லுமிடம். (தலைகீழ்)
05. மரம்.
06. தானிய வகையொன்று. (குழம்பியுள்ளது)
09. வஞ்சகம் செய்பவன். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. இலட்சுமணனின் தாய்.
03. திருப்பிக் கொடுப்பதாக வாங்குவது. (குழம்பியுள்ளது)
04. அரசன். (குழம்பியுள்ளது)
06. நீள் உருண்டை வடிவம். (மாறியுள்ளது)
07. வஞ்சனை. (மாறியுள்ளது)
08. சபதம். (குழம்பியுள்ளது)
09. மாம்பிஞ்சு. (மாறியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி: 205 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1ர | கு | 2வ | ம் | ச | ம் |
| க | | ற் | | ரி | |
| 3சி | ற் | ற | ன் | னை | |
| ய | | ல் | | 4க | ரி |
| ம் | | | ரு | | ட |
| | று | ற் | 5நே | | கோ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாறையாக மாறவுள்ள புவி

தற்போதைய காலநிலை மாற்றங்கள் தொடருமானால் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டளவில் உலகின் உயிரின வகைகளில் பாதி அழிந்துவிடும் என உயிரின மற்றும் புவியியல் நிபுணரான ரிஸ் ஹல்டர் என்பவர் எச்சரித்துள்ளார். இதற்கு கரியமில வாயு மற்றும் புவி வெப்ப அதிகரிப்பே காரணமாக இருக்கும் என கருதப்படுகின்றது.

எதிர்வரும் 33 வருடங்களில் சுமார் 8 லட்சம் உயிரின வகைகள் உலகில் இருந்து முற்று முழுதாக விடைபெற்றுவிடும் எனவும் மேலும் பல கோடி ஆண்டுகளில் புவியின் தரை அமைப்பு நீர் இன்றி பாறை வடிவில் மாறும் என்றும் புவி மிகவும் வெப்பம் நிறைந்த கிரகமாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது. எனினும் இத்தகைய காலகட்டங்களில் மனிதன் மிக இலகுவாக பிற கிரகங்களில் குடியேற்றங்களை அமைக்கும் அளவுக்கு தொழில்நுட்ப வல்லமையைப் பெற்று விடுவான் எனவும் ஆய்வாளர் ரிஸ் ஹல்டரால் எதிர்வு கூறப்படுகின்றது.








காத்தான்குடி 'பிஸ்மி கிண்டர்காடன்' மாணவர்களின் வருடாந்த ஒரு நாள் கல்விச் சுற்றுலா அண்மையில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்டத்தை மையமாகக் கொண்டு இடம்பெற்ற இந்த ஒருநாள் கல்விச் சுற்றுலாவில் மாணவ, மாணவிகள் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், அதன் வாசிகசாலை மற்றும் முஸ்லிம் பாரம்பரிய நூதனசாலை, ஒலுவில் துறைமுகம், சம்மாந்துறை நீர் சுத்திகரிப்பு நிலையம், இறக்காமம் ஓட்டுத் தொழிற்சாலை, ஹிங்குரானை சீனித் தொழிற்சாலை ஆகிய இடங்களைப் பார்வையிட்டதுடன், குறித்த சுற்றுலாவில் மாணவர்கள் கல்முனை கடற்கரையில் விளையாட்டுக்களிலும் கலை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகளையே படங்களில் காண்கிறீர்கள்.

(பழுலுல்லாஹ் பர்ஹான்)

## கைவண்ணங்கள்




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



வொசிங்டன் ஸ்பெக்,
புனித மிக்கேல் கல்.,
மட்டக்களப்பு.

கோ.கிருபாலனி,
கதிரேசன் இந்து ம.கல்.,
நாவலப்பிட்டி.






சி.சஞ்சய்,
மு/உடையார்கட்டு ம.வித்., முல்லைத்தீவு.



ஜஸ்டின் கிஷாந்தன்,
க/இந்து தேசிய கல்., புசல்லாவ.



சிமால் ஸவ்பர்,
மாறை/மின்ஹாத் தேசி.பாட., திக்குவல்லை.



ஆர்.ரீஸா அஹமட்,
விட்டில் பிளவர் பாலர் பாட., வெளிமடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகில் அதியுயர் மழைவீழ்ச்சி பெறும் பிரதேசம் சோரா

உலகில் அதியுயர் மழைவீழ்ச்சி பெறும் இடங்களிலே முதல் இடத்தினை இந்தியாவின் வடக்கின் மேகலாயா மாநிலத்திலுள்ள 'சோரா' எனும் இடம் முன்னிலை வகிக்கின்றது. இங்கு 2007ஆம் ஆண்டு வருடாந்த சராசரி மழைவீழ்ச்சியாக 11,430 மி.மீற்றர் பெறப்பட்டிருந்தது. சோரா (sohra) என்றழைக்கப்படும் இந்த இடம் முன்னர் 'சிராபுஞ்சி' என்றே அழைக்கப்பட்டது.

## மேற்படி அதியுயர் மழைவீழ்ச்சிக்கு காரணம்

இந்த பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து 1484 மீற்றர் (4872 அடி) உயரத்தில் அமைந்துள்ளமையேயாகும். இதனால், கடற்பிரதேசத்தில் இருந்து வீசும் காற்றானது, மலைத் தொடரினால் தடுக்கப்பட்டு, மேலெழுந்து குளிர்ச்சி அடைவதால் சோரா அதிக மழைவீழ்ச்சியை பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வங்களா விரிகுடாவும் சோராவும்

இந்த சோராவின் தென்பகுதியானது, பங்களாதேஷை நோக்கியதாக அமைந்துள்ளது. எனவே, வங்காள விரிகுடாவில் இருந்து வீசும் பருவக்காற்று இங்குள்ள மலைகளால் தடுக்கப்பட்டு இப்பிரதேசம் அதிக மழைவீழ்ச்சியை பெறுகின்றது. இந்த இடத்தில் 1861 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மட்டும் 9,300 மி.மீற்றர் மழை பெய்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதுவே உலகில் ஒரு மாதத்தில் பிரதேசம் ஒன்று பெற்ற அதிக மழைவீழ்ச்சி ஆகும்.

இங்கு சுமார் 15,000 மக்கள் விவசாயத்தையே பிரதான வாழ்வாதாரமாக மேற்கொள்கின்றனர். அத்தோடு, பிரபலமான சுற்றுலாத் துறைக்கென அழகிய காட்சிகள் நிறைந்த இடமாக சோரா திகழ்கின்றது. (-அ)




## வெல்லுங்கள்! விஜய் — தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD



★ 4000 English Letter Writing Software



★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

07.09.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:
நெதர்லாந்து
Pendrive வெற்றியாளர்:
ச.தினுஷன்,
197/40, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு-06

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(21.09.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

இவ்வார கூப்பன்:
21.09.2016
விடை: ...............................
பெயர்: ...............................
முகவரி: ...............................
தெ.பே.இல: ...............................
பாடசாலை: ...............................
தரம்: ...............................

..................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புதல்



ஊடக பாடநெறி பாகம்-II
பாடம்-122



தொலைக்காட்சி சேவைகளுக்கு ஒவ்வொரு பெயர் இருப்பது நாம் அறிந்ததே. மேற்படி தொலைக்காட்சி நிறுவனங்கள் தமது பெயரின் அடையாளத்தைக் குறிக்கும் விதமாக குறியீடு ஒன்றை கொண்டிருக்கும். இந்த குறியீடு 'லோகோ' (Logo) என குறிப்பிடப்படும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நாம் பார்க்கும்போது, குறித்த தொலைக்காட்சி நிறுவனத்தின் பெயரைக் கொண்ட இந்த Logo தான் தொலைக்காட்சித் திரையின் மேல்முனையிலோ, கீழ் முனையிலோ அமைந்திருப்பதைக் காணலாம்.

நாம் பார்த்துக்கொண்டிருக்கும் தொலைக்காட்சி அலைவரிசை எது என்பதை இந்த'குறியீட்டு' அடையாளமே உணர்த்துவதுடன், மேற்படி ஒளிபரப்பை வேறு ஒளிபரப்பு நிறுவனங்கள் உரிமை கொண்டாடுவதை தவிர்ப்பதற்காகவுமே இவ்வாறு செய்யப்படுவதுண்டு.

மேலும், இன்றைய ஊடகத்துறையானது, வணிக ரீதியில் பலத்த போட்டிகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருப்பதனால், தத்தமது Brand ஐ அதாவது, தமது வணிகக் குறியீட்டு அடையாளத்தை முன்னிலைப்படுத்துவதில் பலத்த சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே, தமது Logo வை பிரபல்யப்படுத்துவதில் இந்நிறுவனங்கள் முன்னுரிமை வழங்குகின்றன.

சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட ஒரு தொலைக்காட்சி சேவை இன்னொரு தொலைக்காட்சி சேவையின் ஒளிபரப்பை ஒளிபரப்பும் சந்தர்ப்பங்களும் இருக்கவே செய்கின்றன. குறிப்பிட்ட இரண்டு தொலைக்காட்சி நிறுவனங்களும் புரிந்துணர்வின் அடிப்படையில் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இவ்வாறு குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளை இரவல் வாங்கியது போல் ஒளிபரப்புவதுண்டு. இதற்குண்டான கட்டணத்தையும் குறித்த நிறுவனம் வழங்கத் தவறுவதில்லை. இலங்கையை எடுத்துக்கொண்டால் நமது உள்ளூர் தொலைக்காட்சி சேவைகளில் வெளிநாட்டு தொலைக்காட்சி நிறுவனங்களின் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாவதைக் கண்டிருப்பீர்கள். இவை இந்த இரண்டு நிறுவனங்களும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே நடைபெறுவதாகும். எனினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த ஒளிரப்பு சேவையின் Logo வை மறைத்து விடக்கூடாது என்ற நிபந்தனையின் பேரிலேயே இந்த ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அப்படி அல்லாமல் குறித்த ஒரு தொலைக்காட்சி சேவை மற்றொருதொலைக்காட்சி சேவையின் அனுமதி இல்லாமல் அவர்களின் நிகழ்ச்சிகளையோ, காட்சியையோ ஒளிபரப்பினால் அது சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கூடிய குற்றமாகவே கருதப்படும்.

(தொடரும்)

**- ரிஷபன்**

## இவர்தான் அவர்...

கண்டுபிடியுங்கள்

விடை:
சி.டபிள்யூ.
டபிள்யூ.
கன்னங்கரா





## தெரிந்து கொள்வோம்



★ **இலங்கை நாணயத்தாள்களை அச்சிடும் நிறுவனம் எது? அது எங்குள்ளது?**

திலாறு லங்கா கரன்சி அன்ட் செக்யூரிட்டீஸ் (பிறைவெட் லிமிடெட்), பியகம



★ **சூரிய மண்டலத்திலுள்ள உப கோள்களில் மிகப் பெரிய உப கோள்கள் எவை?**

i. வியாழனின் - கனிமீட்
ii. சனியின் - டைட்டன்



★ **இந்தோனேஷியாவின் ஜனாதிபதி யார்?**

ஜோகோ விடோடோ



★ **இலங்கையில் உள்ள மிக நீண்ட வாகனப் போக்குவரத்துப் குகைப்பாதை எது?**

கம்பளை-நுவரெலியாப் பாதையில் உள்ள 'றம்பொட' குகை



★ **வட மாகாணத் தின் கொடியின் நிறம், மலர் என்பவற்றைக் கூற முடியுமா?**

சிவப்பு வெள்ளை பச்சை நிறத்திலான கொடியின் மத்தியில் சூரியன் உள்ளது.
மலர்- வெண் தாமரை



★ **இலங்கையின் முதலாவது பெண் நீதிபதி யார்? (மஜிஸ்ரேட்)**

செல்வி.ஷிராணி திலகவர்தனே



★ **தீக் குச்சியை முதலில் கண்டுபிடித்தவர் யார்?**

கே.ஸான்செல்



★ **உலகில் மிகப்பெரிய உப்புப் பாலைவனம் எங்குள்ளது?**

பொலிவியா நாட்டிலுள்ள சாலர் டி உய்னி

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1910

பிறப்பு

## ஒகஸ்ட் 26



கொல்கத்தாவில் ஏழை மக்களின் அன்புக்கும் கௌரவத்திற்கும் பாத்திரமான அன்னை தெரேஸா இந்தியர்களால் 'ஏழைகளின் புனிதர்' என கௌரவத்துடன் அழைக்கப்பட்டார்.

## 1979




அன்னை தெரேஸா 1979 இல் சமாதானத்திற்கான நொபெல் பரிசினைப் பெற்றார். அந்த பரிசோடு அவருக்கு கிடைத்த பெருந்தொகையான பணத்தைக் கொண்டு ஆதரவற்றோரை ஆதரிக்கும் செயற்றிட்டத்தை தொடர்ந்து நடத்தினார்.

'அன்னை தெரேஸா' அவர்கள், 1910 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 26 ஆம் திகதி மெஸிடோனியா நாட்டின் ஸ்கோப்ஜே நகரில் பிறந்தார். அவர் அல்பேனிய வம்சத்தைச் சேர்ந்தவர்.







உலகின் ஏழ்மையான நகரங்களில் ஒன்றாக இந்தியாவில் கொல்கத்தா கருதப்படுகின்றது. இந்த கொல்கத்தாவில் மிகவும் ஏழ்மையான கைவிடப்பட்ட மக்களுக்கு அடைக்கலம் தர ஐரோப்பிய பெண்மணி ஒருவர் முன்வந்தார். அவர்தான் அன்னை தெரேஸா. உலகில் தோன்றிய மனதில் என்றும் மறையாத பெண்மணியாவார்.

# பாப்பரசரின் கைகளால் புனிதராக உயர்த்தப்பட்ட புனித அன்னை தெரேஸா





அக்னஸ் கொன்ஷா பொஜாஷிஹு

அவரின் இயற்பெயர் அக்னஸ் கொன்ஷா பொஜாஷிஹு ஆகும். அவரின் தந்தை ஒரு வர்த்தகராவார். எனினும், துரதிர்ஷ்டவசமாக இவரின் 9 ஆவது வயதில் அவரின் தந்தையார் இறந்துவிட்டார். அதன் பின்னர் வறுமை என்பதை தன் அனுபவத்தின்மூலம் உணரத் தொடங்கினார். அதனால், ஏழைகளுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து அவர்களுக்கு உதவ வேண்டும் என சிந்தித்தார். அதன் விளைவு அவர் கத்தோலிக்க கன்னியாஸ்திரி ஆனார்.



## 1950

'பிறர் அன்பின் பணியாளர்கள் சபை' எனும் தொண்டு நிறுவனத்தை நிறுவி அதன்மூலமாக உலகில் வாழும் ஆதரவற்ற மக்களுக்கு அடைக்கலம் கொடுத்தார் அன்னை தெரேஸா. இன்று உலகின் நாலா திசைகளில் இருந்தும் இந்த நிறுவனத்திற்கு உதவிகள் குறைவின்றிக் கிடைப்பதோடு, அவை உலகின் மிக ஏழ்மையான கைவிடப்பட்ட மக்களுக்கு குறைவின்றிக் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த தொண்டு நிறுவனத்திற்கு கத்தோலிக்க திருசபை 1950 ஆம் ஆண்டே உத்தியோகபூர்வமான அங்கீகாரத்தை வழங்கியது. 1965 ஆம் ஆண்டில் இந்தி யாவிற்கு வெளியே வேறு நாடுகளில் இத்தொண்டு நிறுவனத்தின் கிளைகள் திறக்கப்பட்டன.

## 1928

1928 ஆம் ஆண்டு இவரின் 18 வயதில் கன்னியாஸ்திரியாகும் நோக்கில் கன்னியர் மடத்தில் இணைந்தார்.



அன்னை தெரேஸா அவர்களை உத்தியோகபூர்வமாக புனிதராக உயர்த்தும் பணியை பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் மேற்கொண்டார்.

வத்திக்கானில் அன்னை தெரேஸாவின் மறைந்த நாளான செப்டம்பர் 5 ஆம் திகதியன்று நடைபெற்ற விசேட விழாவின் போதே அன்னை தெரேஸா புனிதராக உயர்த்தப்பட்டார்.



## அருளாளர், புனிதர் பட்டங்கள்



இறை தொண்டாற்றிய மரித்த ஒருவரால் நிகழ்த்தப்பட்ட இரு அற்புதங்களைக் கொண்டே அவரை அருளாளராகவும் புனிதராகவும் பிரகடனப்படுத்துவார்கள். ஏனெனில், இறை தொண்டாற்றிய ஒருவரின் மறைவின் பின்னர் அவரது வாழ்க்கை குறித்தும் இறைபணிகளைக் குறித்தும் மறைவின் பின் அவரால் நிகழ்த்தப்பட்ட அற்புதங்களைக் குறித்தும் அனைத்து ஆவணங்களையும் கத்தோலிக்க சபையைச் சேர்ந்த கர்தினால்களின் குழு பரிசிலித்து பின்னரே அருளாளர் மற்றும் புனிதர் பட்டங்களை அவர்கள் வழங்குவார்கள்.

### அருளாளர் பட்டம்

இந்தியாவைச் சேர்ந்த பெண்ணொருவர் வயிற்றில் கட்டியொன்றால் அவதியுற்றபோது, அன்னை தெரேஸா உருவம் பதிக்கப்பட்ட பதக்கத்தை அணிந்து அன்னையை மனமுருக வேண்டியதால் அவர் பூரண குணமடைந்தார். இந்த அற்புதத்தை சான்றாகக் கொண்டு 2003 ஒக்டோபர் 19 ஆம் திகதி அன்னை தெரேஸாவுக்கு அருளாளர் பட்டம் வழங்கப்பட்டிருந்தது.

### புனிதர் பட்டம்



பிரேஸில் நாட்டில் மூளை பாதிக்கப்பட்டு கோமா நிலையில் இருந்த நோயாளியின் குடும்ப அங்கத்தவர்கள் அன்னை தெரேஸாவை வேண்டிய தன் பயனால் அந்த நோயாளி பூரண குணமடைந்த அற்புதத்தை இரண்டாவது சாட்சியாகக் கொண்டே தற்போது அன்னைக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பூமியில் காபனீரொட்சைட் அதிகரித்தால்...

ஆரம்பகாலத்தில் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் வாயுவின் அளவு 0.039 என்ற சதவீதமே இருந்தபோதும், இன்றளவில் அதன் அளவு மிகவும் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. காபனீரொட்சைட்டின் அளவு அதிகரித்தால், பூமியில் வெப்பநிலை அதிகரிக்கும். இதனால் நாம் பல்வேறு பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. அவற்றில் சில வருமாறு;

★ சீரற்ற காலநிலை நிலவும் (குளிர் காலம் குறையும். வெயில் காலம் அதிகரிக்கும். சீரற்ற மழைவீழ்ச்சி)

★ நீர்ப் பற்றாக்குறை ஏற்படும்.

★ வறட்சி நிலவும்.

★ விவசாய நடவடிக்கைகள் பாதிப்படையும் (உணவுப் பற்றாக்குறை ஏற்படும்)

★ இயற்கை அனர்த்தங்கள் அதிகரிக்கும்.

★ துருவப் பகுதிகளில் பனிப்பாறைகள் உருகும் (கடல் நீர் மட்டம் அதிகரிக்கும்)

எனவே, மரங்களை நட்டு காடுகளைப் பாதுகாத்தல், சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் எரிபொருள் பாவனை மற்றும் பொருள் உற்பத்திகளைக் குறைத்தல், இயற்கையாகக் கிடைக்கும் சூரிய ஒளி மற்றும் காற்றிலிருந்து பயன்பெறல் போன்றவற்றின்மூலம் காபனீரொட்சைட்டின் அளவினைக் குறைத்துக் கொள்ளலாம்.



# வித்தியாசப்படும் ரேகைகள்



விரல் ரேகைகள் ஒருவருக்கொருவர் வித்தியாசப்படும் என்று கூறுவார்கள். அதுபோலத்தான்,



நாக்கு மற்றும் உதடு போன்ற உறுப்புகளில் உள்ள ரேகைகளும் ஒருவருக்கொருவர் வித்தியாசப்பட்டுக் காணப்படுமாம்!



# அருகி வரும் சிங்கங்கள்

உலகில் வாழும் சிங்கங்களின் எண்ணிக்கை அருகி வருவதாக கணக்கெடுப்பொன்று தெரிவிக்கின்றது. முன்னர் ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா ஆகிய கண்டங்களில் சிங்கங்கள் அதிகமாக வாழ்ந்து வந்தபோதும், இன்றளவில் ஏனைய கண்டங்களைவிட, ஆபிரிக்காவில் மாத்திரமே சிங்கங்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகமாக வாழ்கின்றன. இயற்கை காரணிகள், மனிதர்களால் வேட்டையாடப்படுதல் போன்ற காரணங்களினாலேயே, சிங்கங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக கூறப்படுகின்றது.



எனவே, இந்த விலங்கினத்தைப் பாதுகாப்பதற்காகவும் அவை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி, 'உலக சிங்கம் தினம்' ஆகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. 'காட்டின் ராஜா' என சிங்கம் சிறப்பித்துக் கூறப் பட்டாலும், சிங்கங்களை அடர்ந்த காடுகளில் அதிகம் காணக்கிடைப்பதில்லை. அவை பெரும்பாலும் புல்வெளிகளிலும் சமவெளிகளிலுமே வாழ்கின்றன.





# சூறாவளி

'சூறாவளி' என்பதன் ஆங்கிலச் சொல் 'Cyclone' என்பதாகும். இந்த சொல்லை முதன்முதலில் அறிமுகப் படுத்தியவர் ஹென்றி பிடிங்க்டன் என்பவர் ஆவார். 'கைக்லோன்' என்ற கிரேக்கச் சொல்லை அடிப்படையாக வைத்தே 'சைக்லோன்' எனும் சொல் அறிமுகமாகியுள்ளது. கிரேக்க மொழியில் 'கைக்லோன்' என்றால் 'சுழன்று அடிக்கும்' என்று அர்த்தப்படுகின்றது.



இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, செப்டெம்பர் 21 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 21, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org